சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

**Case No. OS. 106/2023**

2025ம் ஆண்டு ஜனவரி மாதம் 27ம் நாள் திங்கட்கிழமை

வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.1-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திரு.வ.சிவக்குமார், எழுத்தர் நிலை 2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சொக்கலிங்கம் | தொழில் | வேலை இல்லை |
| தந்தை பெயர் | விஷ்வ சபாபதி | ஜாதி | |
| கிராமம் | சேவூர் | சமயம் | |
| தாலுக்கா | ஆரணி | வயது | |

27.01.2025 முதல் விசாரணை

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். பிரதிவாதிக்கெதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு பற்றிய முழு விவரம் எனக்குத் தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என் தரப்பு சான்றாவணங்களாக, 27.02.1973 தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 15.12.2014 தேதியிட்ட கிரையப்பத்திரம் பதிவிறக்கம் செய்யப்பட்ட சான்றிட்ட நகல் **வா.சா.ஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 08.02.2023 தேதியிட்ட கிரையப்பத்திரம் பதிவிறக்கம் செய்யப்பட்ட சான்றிட்ட நகல் **வா.சா.ஆ 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 27.04.2023 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு நகல் **வா.சா.ஆ 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அஞ்சலக ஒப்புகை அட்டை **வா.சா.ஆ 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 17.05.2023 தேதியிட்ட பதில் அறிவிப்பு **வா.சா.ஆ 6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கில் கோரியுள்ளவாறு தீர்ப்பாக வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.